# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

19- A, Rukmini Lakshmipathy Salai, (Marshal Road),
Egmore, Chennai – 600 008.
Phone : ++91-044-2841 1376 / 2841 1378/ 2841 1379 Fax : ++91-044-2841 1377
Email : tnerc@nic.in Web site : www.tneo.gov.in


## முன்னிலை : திரு. செ. தேவராஜன், மின்குறை தீர்ப்பாளர்

## மேல்முறையீட்டு மனு எண் 46 /2017

திருமதி. ரத்னா,
க/பெ எம்.கே. தேவசகாயம் (லேட்),
எண்.1, சோழகர் நகர்,
விஸ்வாஸ் நகர் விஸ்தரிப்பு,
பிள்ளையார்கோவில் அருகில்,
கருமண்டபம், திருச்சி – 620 001. . . . மேல்முறையீட்டாளர்
(திரு. D. சிவகுமார்)

எதிர்

1) செயற் பொறியாளர்/இ&ப/நகரியம்/திருச்சி,
திருச்சி மின் பகிர்மான வட்டம்/மாநகரம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
மின்வாரிய வளாகம்,
தென்னூர், திருச்சி– 620 017.

2) உதவி செயற் பொறியாளர்/இ&ப/சிந்தாமணிபட்டி,
திருச்சி மின் பகிர்மான வட்டம்/மாநகரம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
மின்வாரிய வளாகம்,
தென்னூர், திருச்சி– 620 017. . . . எதிர்மனுதாரர்கள்
(திரு. எஸ். கிருஷ்ணமூர்த்தி, செயற்பொறியாளர் &
திரு. கே. சண்முகம், இளநிலை பொறியாளர்/பொன்னகர்)

## கேட்புரை நாள் : 4–10–2017

## ஆணை நாள் : 15.12.2017

திருமதி D. ரத்னா, க/பெ தேவசகாயம், சோழகர் நகர், விஸ்வாஸ் நகர் விஸ்தரிப்பு, கருமண்டபம், திருச்சி– 620 001, அவர்களின் 8.6.2017 நாளிட்ட மனு மேல்முறையீட்டு மனு எண்.46/2017 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட மனுவின் மீது மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை 04.10.2017 அன்று நடைபெற்றது. மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள், எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள் மற்றும் இருதரப்பினராலும் கேட்புரை நாளில்

எடுத்துரைக்கப்பட்ட வாதங்கள் ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து மின்குறைதீர்ப்பாளரால் கீழ்கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

**ஆணை**

1. **மேல்முறையீட்டாளரின் கோரிக்கை:**

மேல்முறையீட்டாளர் சோழகர் நகரில் பொது பாதையை ஆக்கிரமிப்பு செய்து போலி ஆவணங்கள் மூலம் மோசடியாக மின் இணைப்பு பெற்ற மின் இணைப்பு எண்கள் 213–005–3379, 213–005–2953 மற்றும் 213–00–147 ஆகியவற்றை மின் துண்டிப்பு செய்ய வேண்டும் என்று கோரியுள்ளார்.

2. **வழக்கின் சுருக்கம்:**

2.1 மேல்முறையீட்டாளர் அவருடைய வீட்டிற்கு பொன்னகர் பிரிவில் மின்இணைப்பு எண்.213–005–2714 பெற்று உபயோகப்படுத்தி வருகின்றார். அவருடைய கிரய பத்திரத்தின்படி சர்வே எண்.165/7ல் தெற்கில் T.S. No. 77க்கு சொந்தமாக கிழமேல் 20 அடி அகலம் கொண்ட ஒரே பொது பாதையாகும். இந்தப்பாதையை எஸ். தேன்மொழி க/பெ என். சக்திவேல், என்பவர் போலி ஆவணங்கள் மூலம் கிரையம் பெற்று மின்இணைப்பு எண்.213–005–3379–ஐ மோசடியாக பெற்றுள்ளார்.

2.2 T.S.No.77–ல் உள்ள 20 அடி பொதுப்பாதையை ஆக்கிரமிப்பு செய்து போலி ஆவணங்கள் மூலம் மோசடியாக மின் இணைப்பு பெற்ற எஸ். தேன்மொழி க/பெ என். சக்திவேல் என்பவரின் மின் இணைப்பை ரத்து செய்ய கோரி திருச்சி மின் பகிர்மான வட்டம்/மாநகரத்தின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்திற்கு தன்னுடைய 19.10.2016 நாளிட்ட மனுவினை சமர்பித்துள்ளார்.

2.3 மன்றம் தன்னுடைய ஆணையை 30.12.2016 அன்று வழங்கியுள்ளது. மன்றத்தின் தீர்வில் அதிருப்தியுற்ற மனுதாரார் இந்த மேல்முறையீட்டு மனுவை மின்குறை தீர்ப்பாளரிடம் சமர்ப்பித்துள்ளார்.

3. **மன்றத்தின் தீர்வு**

3.1 திருச்சி மின்பகிர்மான வட்டம்/மாநகரத்தின் மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் தன்னுடைய தீர்வை 30.12.2016 நாளிட்ட ஆணையில் தெரிவித்துள்ளது. அந்த ஆணையின் சம்பந்தப்பட்ட பத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*"<u>மன்றத்தின் தீர்ப்பு</u>*

*சிவில் வழக்கு தொடர்ந்து நிலுவையில் உள்ளது. அவ்வழக்கின் தீர்ப்பின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவிக்கப்படுகிறது. மேலும், நீதிமன்றத்தில் அம்மின் இணைப்பை துண்டிக்கும்படி ஆணை பெறும் பட்சத்தில் அம்மின் இணைப்பை துண்டிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என தீர்ப்பு அளிக்கப்படுகிறது . "*

**4. <u>மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள்</u>:**

4.1 என்னுடைய குடியிருப்பின் மின்இணைப்பு எண்.213–005–2714 ஆகும். எங்கள் கிரையப்பத்திரம் ஆவண எண்.5990/2007 நாள் 15.11.2007ன் படி சர்வே எண்.165/7ல் தெற்கில் T.S.No.77க்கு சொந்தமான கிழமேல் 20 அடி அகலம் கொண்ட ஒரே பாதையாகும். இந்தப்பாதையை எஸ். தேன்மொழி க/பெ என். சக்திவேல், எண்.6, சோழகர் நகர், விஸ்வாஸ் நகர் விஸ்தரிப்பு கருமண்டபம், திருச்சி–1 என்பவர் ஆவண எண்.5727/1989 நாள் 15.11.1989 மற்றும் டி. ரமேஷ் என்பவர் பொது அதிகார பத்திரத்தின் ஆவண எண்.24/1V/2011 நாள் 7.1.2011–ன் படி போலி ஆவணங்கள் மூலம் பெற்ற மின்இணைப்பு எண்.213–005–3379.

4.2 கடந்த 26.4.2010 அன்று எஸ். தேன்மொழி க/பெ சக்திவேல் என்பவர் மிகவும் மோசடியாக TS No.77க்கு சொந்தமான 20 அடி அகல பொதுப்பாதையை கிரையம் மற்றும் உட்பிரிவு செய்து பட்டா பெற்று மோசடியாக மின்இணைப்பும் பெற்றுள்ளார்.

4.3 எங்கள் வீட்டிற்கு உண்டான T.S. No.77ல் உள்ள 20 அடி அகல பொதுப்பாதையை ஆக்கிரமிப்பு செய்து எஸ். தேன்மொழி, க/பெ சக்திவேல் என்பவர் கட்டிடம் கட்ட முயற்சிப்பதை எதிர்த்து திருச்சி மாவட்ட நீதிமன்றத்தில் நாங்கள் வழக்கு தாக்கல் செய்த தேதி 1.8.2011 வழக்கு எண் O.S. No.1022/2011. நாங்கள் பொதுப்பாதையை ஆக்கிரமிப்பு சம்மந்தமாக வழக்கு தாக்கல் செய்ததை மறைத்து எஸ். தேன்மொழி க/பெ சக்திவேல் என்பவர் திருச்சி மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்த தேதி 12.8.2011 வழக்கு எண் O.S. No.1093/2011.

4.4 தங்களது உறுதி மொழிபடிவத்தில் குறிப்பிட்டுள்ள வரிசை எண்.6–ன் படி வழக்கு இருக்கும் விபரத்தை மறைத்து எஸ். தேன்மொழி க/பெ என். சக்திவேல் என்பவர் போலி ஆவணங்கள் மூலம் மோசடியாக தங்களிடம் மின்இணைப்பு பெற்றது சட்டவிரோதமான செயலாகும்.

4.5 சர்வே எண்.165/8ல் உள்ள மனை எண்.7ஐ மனை எண்.11 என்று போலி ஆவணங்கள் மூலம் மாறுதல் செய்து எம்.கணேசன் த/பெ பி.மாரியப்பன்(1), கே.ராஜேஸ்வரி க/பெ எம். ஞானபண்டிதன்(2), எண்.11,சோழகர் நகர், விஸ்வாஸ்நகர் விஸ்தரிப்பு, கருமண்படம் திருச்சி–1 என்பவர்கள் ஆவண எண்.200/10 நாள்.18.1.2010ன் படி தெற்கில் T.S. No.82க்கு சொந்தமான 20 அடி அகல பொதுப்பாதையை மறைத்து போலி ஆவணங்கள் மூலம் மோசடியாக பெற்ற மின்இணைப்பு எண்.213–005–2953.

4.6 சர்வே எண்.165/7ல் உள்ள மனை எண்.9, 9A, Dr. D. அருண்குமார், த/பெ தேவராஜன் எண்23பி சோழகர் நகர், விஸ்வாஸ் நகர் விஸ்தரிப்பு, கருமண்டபம், திருச்சி–1 என்பவர் ஆவண எண்.2881/11 மற்றும் 2882/11 நாள் 27.4.2011ன் படி வடக்கில் T.S. No.82க்கு சொந்தமான 20 அடி அகல பொதுப்பாதையை மறைத்து போலி ஆவணங்கள் மூலம் மோசடியாக பெற்ற மின்இணைப்பு எண்.213–005–147.

4.7 எனவே, அய்யா அவர்கள் இடத்தை ஆய்வு செய்து போலி ஆவணங்கள் மூலம் மின்இணைப்பு பெற்றுள்ள எம். கணேசன், கே. ராஜேஸ்வரி, Dr.D. அருண்குமார் ஆகியோர்களது மின்இணைப்பையும் வழக்கு இருப்பதை மறைத்து T.S. No.77ல் உள்ள 20 அடி அகல பொதுப்பாதையை ஆக்கிரமிப்பு செய்து போலி ஆவணங்கள் மூலம் மோசடியாக மின்இணைப்பு பெற்ற எஸ். தேன்மொழி க/பெ என். சக்திவேல் என்பவருடைய மின்இணைப்பையும் ரத்து செய்து உத்திரவிடுமாறும் கேட்டுக் கொண்டுள்ளார்.

## 5. <u>எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள் :</u>

5.1 திருச்சி நகரியம் கோட்டம், பொன்னகரம் பிரிவிற்குட்பட்ட மின்இணைப்புகள் 213–005–3379, 213–005–2953, 213–005–147 ஆகியவை போலி ஆவணங்கள் மூலம் பெறப்பட்டுள்ளதாகவும் அவற்றை துண்டிக்க வேண்டும் என்று கோரி திருச்சி பெருநகர் வட்ட மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தில் தான் அளித்த மனு தீர விசாரணை செய்யப்படாமல் ஒருதலை பட்சமாக முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக திரு. டி. சிவக்குமார், த/பெ ரத்னா என்பவர் தனது மேல்முறையீட்டு மனுவினை மின்குறைதீர்ப்பாளர் முன்பாக சமர்ப்பித்துள்ளார்.

5.2 இவற்றில் மின்இணைப்பு எண்.213–005–3379 ஆனது திருமதி. தேன்மொழி என்பவர் பெயரில் 23.9.2011 அன்று வழங்கப்பட்டு 17.10.2016 அன்று திரு. கணேசன் என்பவர் பெயருக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது. மின்இணைப்பு எண்.213–005–2953 ஆனது திரு. குமரன் என்பவர் பெயரில் 21.11.2009 அன்று வழங்கப்பட்டு திரு. கணேசன் மற்றும் திருமதி. ராஜேஸ்வரி ஆகியோர் பெயருக்கு 26.3.2010 அன்று மாற்றம் செய்யப்பட்டுள்ளது. மின்இணைப்பு எண்.203–005–147 ஆனது பல ஆண்டுகளுக்கு முன்பே வழங்கப்பட்டு 5.7.2012 அன்று திரு. டி. அருண்குமார் என்பவர் பெயருக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது. மேற்படி மின்இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளது மற்றும் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது அனைத்தும் பதிவு செய்யப்பட்ட பத்திரங்களின் அடிப்படையிலேயே மேற்கொள்ளப்பட்டுள்ளது.

5.3 திருச்சி பெருநகர வட்ட மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தில் மனுதாரர் அளித்துள்ள மனுவில் திருமதி. தேன்மோழி என்பவர் பொதுப்பாதையினை ஆக்கிரமித்து கட்டிடம் கட்டுவதை எதிர்த்து நீதிமன்றத்தில் 1.8.2011 அன்று வழக்கு (O.S.No.1022/2011) தொடர்ந்துள்ளதாக தெரிவித்துள்ளார். மேற்படி வழக்கிற்கும் மின் வாரியத்திற்கும் எவ்வித தொடர்பும் இல்லை. மேலும், திருச்சி பெருநகர் வட்ட மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தில் வாதியால் முறையிட பட்ட மனுவில் பின்வருமாறு தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

*சிவில் வழக்கு தொடர்ந்து நிலுவையில் உள்ளது. அவ்வழக்கின் தீர்ப்பின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவிக்கப்படுகிறது. மேலும், நீதிமன்றத்தில் அம்மின் இணைப்பை துண்டிக்கும்படி ஆணை பெறும் பட்சத்தில் அம்மின் இணைப்பை துண்டிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என தீர்ப்பு அளிக்கப்படுகிறது.*

5.4 மேலும், தற்போது தனது மேல்மறையீட்டு மனுவுடன் layout பொது பாதை உட்பிரிவு செய்யப்பட்டதாகவும், அதனை ரத்து செய்யக்கோரியும் மனுதாரர் அளித்த முறையீட்டின் மீது வருவாய் கோட்டாட்சியர் அவர்களால் விசாரணை மேற்கொள்ளப்பட்டு உத்தரவு வழங்கப்பட்ட நகலினை இணைத்துள்ளார். மேற்படி விசாரணையின் முடிவிலும், நீதிமன்ற வழக்கு நிலுவையில் உள்ள நிலையில் உத்தரவு எதுவும் வழங்க இயலாது என்று வருவாய் கோட்டாட்சியர் அவர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

5.5 மேற்படி மின்இணைப்புகள் மின்இணைப்பு பெறுவதற்கான உரிய ஆவணங்கள் பெறப்பட்டு வாரிய விதிமுறைகளக்கு உட்பட்டு அனைவருக்கும் சொந்தமான இடங்களில் மின்னளவி பொருத்தப்பட்டு வழங்கப்பட்டுள்ள நிலையில் பாதை தொடர்பாக மனுதாரருக்கும் மற்றவர்களுக்கும் நிலவி வரும் பிரச்சனைகளில் மின்வாரியம் எவ்வித நடவடிக்கையும் எடுக்க இயலாது என்பதையும் மற்றும் மின் பயன்பாட்டிற்கான மின்கட்டணம் தவறாமல் மின் வாரியத்தில் செலுத்தப்பட்டு வரும் நிலையில் நீதிமன்ற உத்தரவு இன்றி அம்மின் இணைப்புகளை TNERC மின் வழங்கல் விதித்தொகுப்பு பகுதி 3 பிரிவு 21ன் படி துண்டிக்க இயலாது என்பதையும் பணிவுடன் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

6. <u>வழக்கிற்குட்பட்ட திரு. மா. கணேசன் மனுவிலுள்ள வாதங்கள் :</u>

6.1 இவ்வழக்கிற்குட்பட்ட திரு. மா. கணேசன், த/பெ மாரியப்பன் அவர்கள் தனது 25.9.2017 நாளிட்ட மனுவில் கீழ்க்கண்ட வாதங்களை மின்குறைதீர்ப்பாளர் முன்பாக சமர்ப்பித்துள்ளார்.

6.2 திருச்சி மாவட்டம், பிராட்டியூர் கிழக்கு கிராமத்தில் அமைந்துள்ள சர்வே எண்.165/8 (51 செண்ட்) 165/7 (46 ½ செண்ட்) மற்றும் 164/3 (70 ½ செண்ட்) நில உரிமை சம்பந்தமாக சிவில் அசல் வழக்கு எண்கள் O.S. No.1093/2011 and O.S.No.275/2016 ஆகிய இரண்டு வழக்குகளும் திருச்சி நீதிமன்றத்தில் (District Munsif (III-ADM) Court, Trichy) நிலுவையில் விசாரணையில் தொடர்ந்து இருந்து வருகிறது. அடுத்த வாய்தா 3/10/2017.

6.3 இத்தருணத்தில் எனது வீட்டின் அருகில் வசிக்கும் திருமதி. டி. ரத்னா க/பெ தேவசகாயம்(லேட்) மற்றும் இவரது மகன் திரு. சிவக்குமார் அவர்கள் இருவரும் சேர்ந்து எனது வீட்டின் மின் இணைப்பை ரத்து செய்ய நடவடிக்கை எடுத்து வருவதாகவும் அதற்காக மின் வாரியத்தில் உள்ள உயர் அதிகாரிகளுக்கு தொடர்ந்து புகார் அளித்தும் வருகிறார்.

6.4 நுகர்வோர்குறை தீர்க்கும் மன்றம், திருச்சி மின்பகிர்மான வட்டம், பெருநகரம், மன்னார்புரம், திருச்சி அவர்களது விசாரணையில் ஏற்கனவே நான் கலந்து கொண்டேன். அந்த மன்ற தீர்ப்பில் “நீதி மன்ற தீர்ப்பின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்படும் என்று தீர்ப்பு அளிக்கப்பட்டது. நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் இருக்கும்போது தாங்கள் மேற்கண்ட நபர்களின் மேல்முறையீட்டு மனுவை தயவு செய்து விசாரணை செய்ய வேண்டாம் என்றும்,

விசாரணை செய்துதான் ஆகவேண்டும் என சூழ்நிலை ஏற்படும் பட்சத்தில் என்னையும் ஒரு பிரதிவாதியாக சேர்த்து விசாரணை செய்யுமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

6.5 மேலும், மின்குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறை ஆணைய விதிகள் 17(4)(ஈ) பிரிவின்படி முறையீட்டின் குறிப்பிட்ட புகார் ஏதாவது நீதிமன்ற நடவடிக்கையில் நிலுவையில் இருந்தாலோ அல்லது அப்பொருள் மீது தக்க அதிகாரம் பெற்ற நீதிமன்றம் ஏற்கனவே கட்டளையோ தீர்ப்போ அல்லது இறுதி ஆணையோ வழங்கியிருந்தாலோ அவ்வாறான புகார் கொண்ட முறையீடாக இருக்கக்கூடாது என விதியில் கூறப்பட்டுள்ளது.

6.6 எனவே, திருமதி. டி. ரத்னா அல்லது இவரது மகன் திரு. சிவக்குமார் அவர்களோ மேற்கண்ட நிலம் தொடர்பாக அல்லது மின் இணைப்பு தொடர்பாக தங்களிடம் மேல்முறையீடு செய்தால் தாங்கள் அவற்றை நிராகரிக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

## 7. <u>மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை:</u>

7.1 மேல்முறையீட்டாளரும் எதிர்மனுதாரரும் தங்களது தரப்பு வாதங்களை நேரில் எடுத்துரைப்பதற்கு வசதியாக 4.10.2017 அன்று மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை நடத்தப்பட்டது.

7.2 மேல்முறையீட்டாளர் திருமதி. D. ரத்னா அவர்களின் மகன் திரு. சிவக்குமார் அவர்கள் மேல்முறையீட்டாளரின் சார்பாக கலந்துகொண்டு தன்னுடைய தரப்பு வாதங்களை எடுத்துரைத்தார்.

7.3 எதிர்மனுதாரர் சார்பில் திரு. எஸ். கிருஷ்ணமூர்த்தி, செயற்பொறியாளர்/புறநகர், மற்றும் திரு. கே. சண்முகம், இளநிலை பொறியாளர்/பொன்னகர் ஆகியோர் கலந்து கொண்டு தங்களுடைய தரப்பு வாதங்களை நேரில் எடுத்துரைத்தனர்.

7.4 இவ்வழக்கில் தன்னையும் ஒரு பிரதிவாதியாக சேர்க்க கோரிய திரு. கணேசன் அவர்களின் மனுவானது காலதாமதமாக பெறப்பட்டதால் அவருடைய மனுவில் உள்ள வாதங்கள் இவ்வழக்கிற்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

8. <u>மின்குறைதீர்ப்பாளரின் தீர்வு</u>

8.1 மேல்முறையீட்டாளர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோர்களின் வாதங்களையும், மற்றும், திரு. கணேசன் அவர்களின் எழுத்துபூர்வமான வாதங்களையும் கருத்தில் கொண்டால், கீழ்கண்டவைகள் வழக்கெழு வினாக்களாக தெரிகின்றன.

(i) ஒரு புதிய மின் இணைப்பை வீட்டிற்கு வழங்க வேண்டும் என்றால் விதிகளில் கூறப்பட்டுள்ளது என்ன ?

(ii) மின் இணைப்பு எண்.213–005–3379, 213–005–2953 மற்றும் 213–00–147 ஆகிய மின் இணைப்புகள் விதிகளின்படிதான் வழங்கப்பட்டுள்ளதா **?**

(iii) மேல்முறையீட்டாளரின் வேண்டுகோளான மேற்கண்ட மின் இணைப்புகளை துண்டிக்க வேண்டும் என்பது ஏற்புடையதா **?**

9. <u>வழக்கெழு 1–ற்கான தீர்வு–</u>

9.1 ஒரு புதிய தாழ்வழுத்த மின் இணைப்பை பெறுவது சம்பந்தமான விதிகள் பற்றி அறிந்துகொள்ள 07.10.2014க்கு முன்பு அமலில் தமிழ்நாடு மின்பகிர்மான விதித்தொகுப்பின் விதி 27(3)ஐ ஆராய வேண்டும். அந்த விதி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*“ 27. Requisitions for Supply of Energy:*

*(1) xxx xxx xx*

*(2) xxx xxx xx*

*(3) The application for HT supply shall be in FORM-4. Application for LT supply (except Agricultural category) including Hut service shall be in FORM - 1 and 3 of Annexure III.*

*Note : Requisitions for supply of energy ( Applications) , even if incomplete, and irrespective of whether they are handed over in person or by post, should be acknowledged in writing. If they are in order, they shall be registered immediately and acknowledged. If they are incomplete, the defects should be indicated and returned without registration.*

9.2 மேற்கண்ட விதி 27(3) ன் படி தாழ்வழுத்த மின்சாரம் விவசாயம் தவிர்த்த விண்ணப்பங்கள் படிவம்–1ன் படியும் குடிசைக்கான மின்இணைப்பு கோரும் விண்ணப்பம் படிவம்–3ன் படியும் இருக்க வேண்டும். இங்கு வழங்கப்பட்ட மின்இணைப்பு தாழ்வழுத்த வீட்டிற்கான மின்இணைப்பு என்பதால் அதற்கான விண்ணப்ப படிவம்–1 கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

## *" FORM - 1*

### *Application Form for LOW TENSION Service connection (except Agriculture and Hut)*
### *FORM OF REQUISITION FOR SUPPLY OF LOW TENSION ENERGY*
### *(Single Phase / Three Phase)*
### *(Refer clause 27(3) of Tamil Nadu Regulatory commission, TAMIL NADU ELECTRICITY DISTRIBUTION CODE)*

*To*

*The Designated Engineer*
*(Address of the Licensee)*
*Sir,*

*1. I hereby require you to supply electrical energy to the premises hereinafter described.*
*(Note this undertaking does not preclude a separate written contract being entered into, if so desired by the Licensee or the consumer.)*

*2. I agree to pay for said energy, service connection charges, the deposit of such security, meter rent, as may be demanded in accordance with the scale of rates prescribed under Tamil Nadu Electricity Distribution Code, Supply Code, notifications and orders issued in this regard by Tamil Nadu Electricity Regulatory Commission.*

*3. I wish to be charged under Tariff ………… under schedule of the TNERC tariff order dated……*

*4. I agree to take supply for ……………. years and utilize the energy in the premises described hereunder or outside the premises for my bonafide use.*

*5. In case I sell or otherwise dispose of the property / vacate the premises while the supply is continued, I agree to give one Calendar month notice in writing and pay all the arrears to the Licensee. Failing such notice, I hold myself responsible for energy consumed in the premises till such notice is given to the Licensee.*

*6. Description of the premises*

*Door No. and / or name of the house or premises*
*Street*
*Town / village and Taluk*

*Owned by (Name in Block letters)*
*Tenanted by (Name in block letters)*

*Applicant's correspondence address*

*7. The following are my requirements*

| (A) Lighting | Number of Point's | Wattage of point's | Total wattage |
|---|---|---|---|
| (i) Lights - - - | | | |
| (ii) Fans - - - | | | |
| (iii) Convenient wall plugs - - - | | | |
| (B )Domestic electrical apparatus: | | | |
| (i)Cookers - - - | | | |
| (ii) Water heaters - - - | | | |
| (iii) Refrigerator - - - | | | |
| (iv) Air Conditioners | | | |
| (v) Other purpose - - - | | | |
| (vi) Convenience wall plugs--- | | | |
| (C) Power Loads | | | |
| (i) Domestic | | | |
| (ii) Industrial | | | |
| (iii) Welding | | | |
| (iv) Other purposes | | | |
| (v) Convenient Wall Plugs | | | |
| Demand applied for in KW | | | |

The wiring has been completed on :
Signature of the Consumer
Place:
Date:

*Note : The application shall be accompanied with the following documents:*

- *i) Proof of ownership (sale deed or property / water/sewerage tax receipt)*
- *ii) Consent letter from owner wherever applicable*

*FOR LICENSEE'S USE ONLY*

Application registered as No. dated

*Note.*

1. *In case of transfer of the service, fresh application should be signed by the transferee (or a letter signed by both the transferor and transferee, agreeing to the above conditions for transfer should be obtained).*

2. *Additions or omissions to the connected load to be notified to the Licensee before effecting the electricity connections.*

*PRECAUTION TO BE ADOPTED BY CONSUMERS, OWNERS ELECTRICAL CONTRACTORS, ELECTRICAL WORKMEN, AND OTHER SUPPLIERS OF ENERGY*

*No electrical installation work, including additions, alterations, repairs and adjustments to existinginstallations except such replacement of lamps, fans, fuses, switches and other component parts of the installations as in no way alter its capacity or character shall be carried out upon the premises or on behalf of any consumer or owner for the purpose of the supply of energy to such consumer or owner, except by an authorized person specified by the Authority.*

9.3 மேற்கண்ட விண்ணப்பத்தின்படி கீழ்கண்ட ஆவணங்களும் இணைத்து விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

(i) உரிமைச் சான்று (விற்பனைப் பத்திரம், தண்ணீர் அல்லது வடிகால் வரியின் பற்றுச் சீட்டு)

(ii) உரிமையாளரது சம்மதக் கடிதம், தேவைப்பட்டால் உரிமதாரரின் பயன்பாட்டுக்கு மட்டும்

7.4 எனவே, புதிய மின்இணைப்பு கோருவோர் ஒழுங்குமுறை ஆணையத்தால் வடிவமைக்கப்பட்ட விண்ணப்ப படிவத்தில் மின்இணைப்பு கோரும் விண்ணப்பத்தோடு பத்தி 7.3–ல் தெரிவிக்கப்பட்டு இருக்கும் ஆவணங்களுடன் சமர்ப்பிக்க வேண்டும் என்று தீர்வு செய்யப்படுகிறது.

**10.** **<u>வழக்கெழு 2–ற்கான தீர்வு–</u>**

**10.1** மேற்கண்ட மின் இணைப்புகள் **213–005–3379, 213–005–2953** மற்றும் **213–00–147** வழங்கியது மின் வழங்கல் விதித் தொகுப்பின் விதி **27 (3)** ற்கு இணையாக உள்ளதா என்பதை அறிய நாம் மின் இணைப்பு பெறுவதற்காக சமர்பிக்கப்பட்ட ஆவணங்களை ஆராய வேண்டும். எதிர்மனுதாரர் கீழ்கண்ட ஆவணங்களின் நகல்களை சமர்பித்துள்ளார்.

(i) மின் இணைப்பு எண். **213–005–3379** –ற்கு சமர்பிக்கப்பட்ட குறைந்த மின் அழுத்த மின்சாரம் பெறுவதற்கு விண்ணப்பப் படிவம்

(ii) திருமதி.தேன்மொழி அவர்களின் திருச்சிராப்பள்ளி மாவட்ட இணை சார்பதிவாளர் அலுவலகத்தல் **1**வது புத்தகம் **1989–**ம் ஆண்டின் **5727**ம் எண் ஆவணமாகப் பதிவு செய்யப்பட்ட பத்திரத்தின் நகல்.

(iii) திரு.கணேசன் அவர்கள் திருமதி தேன்மொழி அவர்களிடம் கிரையம் பெற்ற ஆவண எண்.**2232/2013–**ன் நகல் மற்றும் பெயர் மாற்றத்திற்கு சமர்பித்த திருச்சிராப்பள்ளி மாநகராட்சியின் சொத்துவரி ரசீது.

(iv) மின் இணைப்பு எண். **213–005–2953** பெயர் மாற்றம் பெறுவதற்காக சமர்பிக்கப்பட்ட திரு.கணேசன் மற்றும் திருமதி கே.ராஜேஸ்வரி ஆகியோர் கூட்டாக திரு.எம்.ஞானபண்டிதன் அவர்களிடமிருந்து கிரையம் பெற்ற ஆவண எண்.**200/2010** ன் நகல்.

(v) மின் இணைப்பு எண். 213–005–147 பெயர் மாற்றம் பெறுவதற்காக சமர்பிக்கப்பட்ட டாக்டர் திரு.டி.அருண்குமார் அவர்கள் திரு.ஈ.பிரகாஸ் அவர்களிடமிருந்து கிரையம் பெற்ற ஆவண எண்.2882/2011 ன் நகல்.

**10.2** மேற்கண்ட தகவல்களின்படி மேற்படி மின் இணைப்புகள் பெறுவதற்கு மற்றும் பெயர் மாற்றம் செய்வதற்கு ஒழுங்குமுறை ஆணையத்தால் வரையறுக்கப்பட்ட விண்ணப்ப படிவத்தின் குறிப்பு (1) ல் தெரிவிக்கப்பட்டுள்ள உரிமைச்சான்றான விற்பனைப் பத்திரத்தை சமர்பித்து பெறப்பட்டுள்ளதால் விண்ணப்பம், ஒழுங்குமுறை ஆணையம் விதித்துள்ள ஆவணங்களின்படி பெறப்பட்டுதான் மின் இணைப்பு மற்றும் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்று தீர்வு செய்யப்படுகிறது.

**11.** **<u>வழக்கெழுவினா மூன்றிற்கான தீர்வு :</u>**

**11.1** மேல்முறையீட்டாளர் மின் இணைப்பு எண்கள் முறையே 213–005–3379, 213–005–2953 மற்றும் 213–00–147 ஆகியவை சர்வே எண்.165/7ல் தெற்கில் T.S.No.77க்கு சொந்தமான கிழமேல் 20 அடி அகலம் கொண்ட ஒரே பொது பாதையை போலி ஆவணங்கள் மூலம் கிரையம் மற்றும் உட்பிரிவு செய்து பட்டா பெற்று மோசடியாக மின்இணைப்பும் பெற்றுள்ளதாக தெரிவித்து மேற்கண்ட மின் இணைப்புகளை மின்துண்டிப்பு செய்யுமாறு கோரியுள்ளார்.

**11.2** எதிர்மனுதாரர் மேற்கண்ட இணைப்புகள் தமிழ்நாடு மின்சார பகிர்மான விதிகளின் படியே கொடுக்கப்பட்டுள்ளதாக வாதிட்டு அதற்குண்டான ஆவணங்களையும் சமர்ப்பித்துள்ளார்.

**9.3** மேலும் எதிர்மனுதாரர் பொது பாதை தொடர்பாக மேல்முறையீட்டாளருக்கும் மற்றவர்களுக்கும் நிலவி வரும் பிரச்சனைகளில் மின்வாரியம் எவ்வித நடவடிக்கையும் எடுக்க இயலாது எனவும், மேற்கண்ட மின் இணைப்புகளின் மின் பயன்பாட்டிற்கான கட்டணம் தவறாமல் மின் வாரியத்தில் செலுத்தப்பட்டு வரும் நிலையில் நீதிமன்ற உத்தரவு இன்றி அம்மின்இணைப்புகளை TNERC மின்வழங்கள் தொகுப்பு பகுதி 3 பிரிவு 21ன் படி துண்டிக்க இயலாது என்றும் தெரிவித்தார்.

**11.4** வழக்கெழு வினா இரண்டிற்கான தீர்வின்படி, மேற்கண்ட மின்இணைப்பு எண்கள் முறையே 213–005–3379, 213–005–2953 மற்றும் 213–00–147 ஆகிய மின் இணைப்புகள் ஒழுங்குமுறை ஆணையம் வகுத்துள்ள விண்ணப்ப படிவத்தில் தெரிவித்துள்ள ஆவணங்களில் ஒன்றான விற்பனை பத்திரம் பெற்றுத்தான் வழங்கப்பட்டுள்ளது மற்றும் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

எனவே மின்இணைப்பு எண்.213–005–3379, 213–005–2953 மற்றும் 213–00–147 ஆகியவை ஒழுங்குமுறை ஆணையத்தின் விதிகளுக்கு இணங்கவே வழங்கப்பட்டு பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளதால் மின் துண்டிப்பு செய்ய முடியாது என்ற எதிர்மனுதாரரின் வாதம் எனக்கு ஏற்புடையதாக இருக்கிறது.

**11.5** மேலும், கீழ்கண்ட காரணங்களால், மேல் முறையீட்டாளரின் கோரிக்கை ஏற்றுக் கொள்ள முடியாது என்று தீர்வு செய்யப்படுகிறது.

(i) மேல்முறையீட்டாளர் சர்வே எண்.165/7ல் தெற்கில் T.S.No.77க்கு சொந்தமான கிழமேல் 20 அடி அகலம் கொண்ட பொதுப்பாதை என்பதால் மேற்கண்ட மின் இணைப்புகளை துண்டிக்க கோருகின்றார். ஒரு சொத்தின் உரிமையைப்பற்றி தீர்மானம் செய்வதற்கு உரிய உரிமையியல் நீதி மன்றத்திற்குத்தான் அதிகாரம் உள்ளது. மின் குறைதீர்ப்பாளருக்கு இல்லை.

(ii) ஒழுங்குமறை ஆணையத்தால் வரையறுக்கப்பட்ட விதிகளின் படிதான் ஆவணங்கள் பெறப்பட்டு மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. எனவே, மின் இணைப்பு வழங்கியதில் விதி மீறல் இல்லை.

(iii) மேற்கண்ட மின் இணைப்புகளில் மின் கட்டணம் சரியாக செலுத்தப்படுவதால் மின்இணைப்புகளை துண்டிப்பு செய்வது விதிகளின்படி இயலாது.

11.6 இவ்வழக்கின் பிரதிவாதியான திரு.எம்.கணேசன் அவர்கள் சிவில் வழக்கு தொடர்ந்து நிலுவையில் உள்ளதாக அவரது எழுத்துபூர்வமான வாதுரையில் தெரிவித்துள்ளார். எனவே, நீதி மன்ற தீர்ப்பின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்படும் என்ற திருச்சி மின்பகிர்மான வட்டத்தின் நுகர்வோர் குறைதீர் மன்றம் அளித்த தீர்ப்பு எனக்கு ஏற்புடையதாக இருக்கிறது.

**12. <u>முடிவுரை:</u>**

**12.1** என்னுடைய வழக்கெழுவினா ஒன்று, இரண்டு மற்றும் மூன்றிற்க்கான தீர்வுகளின்படி திருச்சி பெருநகர வட்ட மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தின் தீர்வில், மாற்றம் எதுவும் செய்ய முடியாது என்று தீர்வு செய்யப்படுகிறது.

12.2 மேற்கண்ட தீர்வுடன் மேல்முறையீட்டு மனு எண். 46/2017 முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது. செலவு தொகை இல்லை.

**(செ.தேவராஜன்)**
மின்குறைதீர்ப்பாளர்

<u>பெறுநர்</u>

1) திருமதி. ரத்னா,
க/பெ எம்.கே. தேவசகாயம் (லேட்),
எண்.1, சோழகர் நகர்,
விஸ்வாஸ் நகர் விஸ்தரிப்பு,
பிள்ளையார்கோவில் அருகில்,
கருமண்டபம், திருச்சி – 620 001.

2) செயற் பொறியாளர்/இ&ப/நகரியம்/திருச்சி,
திருச்சி மின் பகிர்மான வட்டம்/மாநகரம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
மின்வாரிய வளாகம்,
தென்னூர், திருச்சி– 620 017.

3) உதவி செயற் பொறியாளர்/இ&ப/சிந்தாமணிபட்டி,
திருச்சி மின் பகிர்மான வட்டம்/மாநகரம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
மின்வாரிய வளாகம்,
தென்னூர், திருச்சி– 620 017.

4) தலைவர்,
(மேற்பார்வை பொறியாளர்),
மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம்,
திருச்சி மின் பகிர்மான வட்டம்/மாநகரம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
மன்னார்புரம், திருச்சி – 620 020.

5) தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை,
சென்னை – 600 002.

6) செயலாளர்,
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்
எண். 19A, ருக்மினி லட்சுமிபதி சாலை
எழும்பூர், சென்னை – 600 008.

7) உதவி இயக்குநர் (கணினி) – <u>**மின் குறைதீர்ப்பாளரின் இணையதளத்தில் வெளியிடுவதற்காக**</u>
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
எண். 19A, ருக்மினி லட்சுமிபதி சாலை,
எழும்பூர்,
சென்னை – 600 008.